මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION & NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: MF/ST/01/02
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2022.09.01

## ஊடக வெளியீடு

## சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர் மட்டத்திலான உடன்படிக்கை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் அதிகாரிகள் ஐ.அ.டொ.2.9 பில்லியன் தொகையைக் கொண்ட நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் ஒத்துழைப்பு வழங்கப்படும் நான்கு ஆண்டுகால நிகழ்ச்சித்திட்டம் ஒன்று தொடர்பாக, தாம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர் மட்டத்திலான இணக்கப்பாடு ஒன்றினை எட்டியுள்ளதாக இன்று அறிவித்துள்ளனர்.

இவ் அறிவிப்பானது, 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தொடரின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது நாட்டில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் பொது நிதியின் நிலைதகுதன்மை ஆகியவற்றினை மீள உருவாக்குவதனை இலக்காகக் கொண்ட மறுசீமைப்புக்களின் தொகுதி ஒன்றிற்கான இணக்கப்பாட்டிற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பணிக்குழுவானது, நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றுடன் பல கூட்டங்களை நடாத்தியிருந்தது.

இந்த அறிவித்தலின் பின்னர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேதகு சனாதிபதியும் நிதி அமைச்சருமாகிய திரு.ரணில் விக்கிரமசிங்ஹ பின்வருமாறு தெரிவித்துள்ளார் “இந்த உடன்படிக்கை எமது நாட்டின் சக பிரசைகளுக்கு ஒரு சிறந்த வாழ்க்கையை வழங்குவதற்குத் தேவையான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கான எமது உறுதிப்பாட்டிற்கான ஒரு சாட்சியமாகும். இது தற்போதைய வெளிநாட்டுச் சமமின்மைகளைச் சமாளிப்பதற்கும் எமது வளர்ச்சி இயந்திரத்தினை முடுக்கிவிடுவதற்கும் உதவியாக, சர்வதேச நாணய நிதியத்தினதும் ஏனைய அபிவிருத்திப் பங்காளர்களினதும் நிதி ஒத்துழைப்பின் ஏற்பாட்டுக்கு வழியமைக்கிறது. மிகக் குறுகிய காலத்தில் உடன்பாட்டினை எட்டுவதற்காக கடின உழைப்பினையும் அர்ப்பணிப்பையும் வழங்கிய சர்வதேச நாணய நிதியக் குழுவினர், நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி பணிக்குழுவினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”

உடன்பாடு எட்டப்பட்ட பொருளாதார மறுசீரமைப்புப் பொதித்தொகுதியானது இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள சவால்களைப் பரந்துபட்ட ரீதியில் முகங்கொடுப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாவன, (i) மிகப் பாதிக்கப்படக்கூடியவர்களையும் நிதி உறுதிப்பாட்டையும் பாதுகாக்கும் அதேவேளை, அரசிறை சீராக்கல்கள் மற்றும் படுகடன் மீள்கட்டமைப்பின் ஊடாக பொது நிதி நிலைதகுதன்மையை மீட்டெடுத்தல், (ii) விலை உறுதிப்பாட்டினை மீளக்கொண்டுவரல் மற்றும் வெளிநாட்டு இடையகங்களைக் கட்டியெழுப்பல், மற்றும் (iii) கட்டமைப்பு மறுசீரமைப்புக்களின் ஊடாக நாட்டின் வளர்ச்சிக்கான இடர்பாடுகளை நீக்குதல் மற்றும் ஆளுகை மேம்பாடு.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர் மட்டத்திலான இணக்கப்பாடு ஒன்றினை எட்டுவது, அரசாங்கத்தின் உடனடிக் குறிக்கோள்களுள் ஒன்றாகவும் கடந்த மாதம் தெரிவுசெய்யப்பட்ட பின்னர்

அதிமேதகு சனாதிபதி அவர்களின் பணிப்புரையாகவும் இருந்தது. குறித்த அதிகாரிகள், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பினைப் பெற்று இலங்கையின் உத்தியோகபூர்வ இரு தரப்பு கடன் வழங்குனர்களிடமிருந்து நிதியளிப்பு உறுதிப்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக ஊழியர் மட்டத்திலான உடன்படிக்கையின் கீழ் இணங்கப்பட்ட முன்னரங்குச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபடவுள்ளனர்.

மேற்படி அதிகாரிகள், சர்வதேச நிதித்துறை மற்றும் சட்ட ஆலோசகர்களுடன் அவர்களது படுகடன் மீள்கட்டமைப்பு உபாயத்திட்டத்திற்காக பணியாற்றி வருகின்றனர். அவர்கள் மேலும் நாட்டின் அண்மைய பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் பற்றி கடன்வழங்குனர்களை அறிவூட்டுவதற்காக எதிர்வரும் சில வாரங்களுக்குள் விளக்கக்காட்சி ஒன்றினையும் மேற்கொள்ளவுள்ளனர். இதில் பிரதானமாக சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டினை எட்டிய மறுசீரமைப்புப் பொதித்தொகுதி மற்றும் கடன் மீள்கட்டமைப்புச் செயல்முறையின் அடுத்த படிமுறைகள் என்பன உள்ளடக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு lk.investors@lazard.com/ srilanka@cliffordchance.com எனும் இணையத்தளத்தை நாடவும்.